*முனைவர் .எஸ். நகூர் கனி*
*இணைப்பேராசிரியர்*
*முதுகலை தமிழாய்வுத்துறை*
*ஜமால் முகமது கல்லூரி*
*திருச்சிராப்பள்ளி-20*

தொல்காப்பியம் - பொருளதிகாரம்
***பயிற்சி வினாக்கள்***
அலகு 1: அகத்திணையியல்

1. தொல்காப்பியம் கூறும் அகத்திணைகள்.
   அ) ஏழு ஆ) ஐந்து
   இ) பன்னிரண்டு ஈ) நான்கு
2. ஐந்திணைகளில் எத்திணை தவிர நிலப்பாகுபாடு பகுக்கப்பட்டுள்ளது?
   அ) குறிஞ்சி ஆ) மருதம்
   இ) நெய்தல் ஈ) பாலை
3. பாடலுள் பயின்று வரும் முப்பொருள்.
   அ) அறம், பொருள், இன்பம் ஆ) முதல், கரு, உரி
   இ) பதி, பசு, பாசம் ஈ) இயல், இசை, நாடகம்
4. முதல் எனப்படுவது ______.
   அ) நிலம், பொழுது ஆ) கைக்கிளை, பெருந்திணை
   இ) குறிஞ்சி முல்லை ஈ) அகத்திணை, புறத்திணை
5. பனிஎதிர் பருவம் எதற்குரியது?
   அ) கைக்கிளை ஆ) குறிஞ்சி
   இ) முல்லை ஈ) பெருந்திணை
6. வைகறை விடியல் ______.
   அ) குறிஞ்சி ஆ) முல்லை
   இ) மருதம் ஈ) நெய்தல்
7. நெய்தலுக்குரியது எது?
   அ) மாலை ஆ) யாமம்
   இ) விடியல் ஈ) எற்பாடு
8. பாலைக்குரிய உரிப்பொருள் எது?
   அ) புணர்தல் ஆ) பிரிதல்
   இ) இருத்தல் ஈ) இரங்கல்
9. ‘‘தெய்வம் உணாவே மா, மரம்...’’ என்பன
   அ) முதற்பொருள் ஆ) கருப்பொருள்
   இ) உரிப்பொருள் ஈ) சொற்பொருள்
10. ஆயர், வேட்டுவர் எத்திணை ஆடவர்?
    அ) குறிஞ்சி ஆ) மருதம்
    இ) முல்லை ஈ) பாலை
11. ஓதலும் தூதும் ______.
    அ) உயர்ந்தோர் மேன ஆ) இழிந்தோர் மேன
    இ) வேளாளர் மேன ஈ) சூத்திரர் மேன
12. முந்நீர் வழக்கம் யாரோடு இல்லை?
    அ) மகடூஉவோடு இல்லை ஆ) ஆடூஉவோடு இல்லை
    இ) குதிரையோடு இல்லை ஈ) யானையோடு இல்லை
13. ‘‘ஏமப்பேரூர்ச் சேரியும் சுரத்தும்
    தாமே செல்லும் ______ஊரே’’.
    அ) அந்தணரும் ஆ) அரசரும்
    இ) தந்தையரும் ஈ) தாயரும்
14. மகடூஉ மடலேறுதல் எத்திணைக்கு உரியது?

அ) குறிஞ்சி ஆ) மருதம்
இ) நெய்தல் ஈ) எத்திணைக்கும் உரியதல்ல

15. உள்ளுறை உவமம் கருப்பொருள்களில் எது நீங்கலாக ஏனைய பொருள்களில் இடம்பெறும்?
அ) தெய்வம் ஆ) உணாவே
இ) மா ஈ) மரம்

16. ‘‘சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்’’ எத்திணைக்குரிய குறிப்பு?
அ) பெருந்திணை ஆ) கைக்கிளை
இ) குறிஞ்சி ஈ) முல்லை

17. மடலேறுதல் எத்திணையின் பாற்படும்?
அ) கைக்கிளை ஆ) பெருந்திணை
இ) நொச்சி ஈ) கரந்தை

18. ‘‘இளமைதீர்திறம் காமத்து மிகுதிறம் ...’’ எத்திணைக்குரிய குறிப்புகள்?
அ) பாலை ஆ) கைக்கிளை
இ) பெருந்திணை ஈ) புறத்திணை

19. நாடக வழக்கு உலகியல் வழக்கு அகத்திணைச் செய்யுட்களில் எப்பா வகைகளில் கூறப்படும்?
அ) ஆசிரியப்பா, வெண்பா ஆ) வஞ்சிப்பா, கலிப்பா
இ) கலிப்பா, பரிபாட்டு ஈ) வெண்பா, விருத்தப்பா

20. ‘‘சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர் ...’’ எத்திணைக்குரியோர்?
அ) அகத்திணை ஆ) புறத்திணை
இ) காஞ்சித்திணை ஈ) வெட்சித்திணை

## அலகு 2: புறத்திணையியல்

21. தொல்காப்பியம் குறிப்பிடும் புறத்திணைகள்
அ) 5 ஆ) 7
இ) 9 ஈ) 12

22. வெட்சியின் இலக்கணம்.
அ) ஆ கவர்தல் ஆ) ஆ மீட்டல்
இ) அடல் குறித்தல் ஈ) சுற்றி வளைத்தல்

23. ‘பாதீடு’, ‘உண்டாட்டு’ – எதன் துறைகள்?
அ) வெட்சி ஆ) வஞ்சி
இ) உழிஞை ஈ) தும்பை

24. வெறியாடல் இடம்பெறும் திணை.
அ) பாடாண் ஆ) காஞ்சி
இ) வெட்சி ஈ) வஞ்சி

25. கரந்தைத் திணையைத் தொல்காப்பியன் எத்திணையில் உள்ளடக்குகிறான்?
அ) வாகை ஆ) பாடான்
இ) வெட்சி ஈ) வஞ்சி

26. வஞ்சி எத்திணைக்குப் புறன்?
அ) வெட்சி ஆ) வஞ்சி
இ) கரந்தை ஈ) வாகை

27. வஞ்சிப்போருக்குக் காரணம்.
அ) பெண் நசை ஆ) மண் நசை
இ) பொன் நசை ஈ) ஆண் நசை

28. ‘‘முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்’’ – எத்திணைக்குரியன?
அ) பாடாண் ஆ) காஞ்சி
இ) உழிஞை ஈ) தும்பை

29. மதில்மேல் அமையும் ஏணிப்போர் இடம்பெறும் திணை.
அ) கரந்தை ஆ) வஞ்சி
இ) நொச்சி ஈ) தும்பை

30. வலிமையின் பொருட்டே நிகழ்த்தப்படும் போரின் திணை
அ) கரந்தை ஆ) உழிஞை

இ) நொச்சி ஈ) தும்பை

31. நெய்தல் எதன் புறனாகும்?
அ) வஞ்சி ஆ) உழிஞை
இ) வாகை ஈ) தும்பை

32. ‘தபுதிப் பக்கம்’ என்பது போர் செய்யும்போது எந்த இருவர் அழிதலைக்குறிக்கும்?
அ) அரசர்கள் ஆ) தளபதிகள்
இ) வீரர்கள் ஈ) ஒற்றர்கள்

33. வர்க்கம் - வருணம் - தொழில்முறை பேசப்படும் துறை?
அ) வாகை ஆ) காஞ்சி
இ) பாடாண் ஈ) நொச்சி

34. முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை இடம்பெறும் திணை?
அ) அகத்திணை ஆ) குறிஞ்சி
இ) வாகை ஈ) வெட்சி

35. காஞ்சித்திணை பேசும் இலக்கணம்.
அ) நிலையாமை ஆ) ஆநிரை கவர்தல்
இ) ஆட்சியைப் பிடித்தல் ஈ) வலிமையை நிலை நாட்டல்

36. “இன்னது செய்யத் தவறினால் இன்னவாறு ஆகுக” என மொழியும் காஞ்சி எது?
அ) பெருங்காஞ்சி ஆ) முதுமைக்காஞ்சி
இ) வஞ்சிக்காஞ்சி ஈ) மன்னைக்காஞ்சி

37. புண்பட்ட வீரனைப் பேய் அணுகாமல் காக்கும் மனைவியின் செயலைக் கூறும் காஞ்சி.
அ) மறக்காஞ்சி ஆ) மன்னைக்காஞ்சி
இ) பேய்க்காஞ்சி ஈ) தொடாக்காஞ்சி

38. “குழவி மருங்கினும் கிழவதாகும்” - எனும் நூற்பா சுட்டும் இலக்கிய வகைமை.
அ) பிள்ளைத்தமிழ் ஆ) அந்தாதி
இ) பதிற்றந்தாதி ஈ) காப்பியம்

39. “ஊரொடு தோற்றமும் உரித்து என மொழிப” எவ்விலக்கிய வகையைச் சுட்டுகிறது?
அ) பிள்ளைத்தமிழ் ஆ) உலா
இ) தூது ஈ) அந்தாதி

40. ஆற்றுப்படையின் இலக்கணம்.
அ) பெறார்க்கு அறிவுறுத்தல் ஆ) துயிலெழுப்பல்
இ) பிறந்தநாள் கொண்டாடல் ஈ) நிமித்தம் கூறல்

## அலகு 3: களவியல், கற்பியல்

41. மறையோர் தேயத்து மன்றல்.
அ) 4 ஆ) 5
இ) 7 ஈ) 8

42. பெருமையும் உரனும் யாருக்குரிய இயல்பு?
அ) ஆடவர் ஆ) பெண்டிர்
இ) பேடியர் ஈ) வீரர்

43. “நோக்குவ எல்லாம் அவையே போறல்” – எது?
அ) மரம் ஆ) பறவை
இ) மான் ஈ) காதல் உணர்வு

44. பாங்கன் நிமித்தம்.
அ) 10 ஆ) 12
இ) 14 ஈ) 11

45. உயிரினும் சிறந்தது ______.
அ) நாணம் ஆ) காதல்
இ) கற்பு ஈ) கணவன்

46. தோழி யாரின் மகள்?
அ) பார்ப்பான் ஆ) பாங்கன்
இ) பாங்கி ஈ) செவிலி

47. பகற்குறி நடைபெறும் இடம் எது?
அ) வீட்டு எல்லை ஆ) வீட்டின் புறப்பகுதி
இ) கடற்கரை ஈ) காடு

48. பெண்பாற்கு உரியவை ______.
அ) அச்சம் ஆ) நாணம்
இ) மடம் ஈ) மூன்றும்

49. மடலேறுதல் என்பது யாருக்குரியது?
அ) தலைவன் ஆ) தலைவி
இ) தோழி ஈ) செவிலி

50. காமத் திணையில் தலைவியின் விருப்பம் எதனால் வெளிப்படும்?
அ) கண் ஆ) முகம்
இ) கை ஈ) மார்பு

51. கரணம் என்பது
அ) வயசுச் சடங்கு ஆ) வதுவைச் சடங்கு
இ) இறுதிச் சடங்கு ஈ) ஈமச் சடங்கு

52. "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் ______ என்ப"
அ) ஜனனம் ஆ) சரணம்
இ) மரணம் ஈ) கரணம்

53. கற்பியலில் தலைவனுக்குக் கூற்று நிகழும் இடங்களின் எண்ணிக்கை ______.
அ) 33 ஆ) 31
இ) 37 ஈ) 35

54. "புனிறு தீர் பொழுது" என்பது
அ) பூப்பெய்தியகாலம் ஆ) பேறு காலம் முடிந்த காலம்
இ) சீமந்த காலம் ஈ) கருத்தரித்த காலம்

55. "தந்தையர் ஒப்பர் மக்கள்" – என்று மகனைப் பழித்தது யார்?
அ) தலைவி ஆ) தோழி
இ) செவிலி ஈ) நற்றாய்

56. "கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும் ... பொறையும் நிறையும் போன்ற பிறவும்" யாரின் மாண்புகள்?
அ) நற்றாய் ஆ) செவிலி
இ) தலைவன் ஈ) தலைவி

57. 'செலவழுங்கல்' என்பது
அ) காலம் தாழ்த்தல் ஆ) காலத்தை முற்படுத்தல்
இ) பொருளை மறைத்தல் ஈ) பொருளைச் செலவழித்தல்

58. தலைவிக்குப் பூப்புத் தோன்றிய எத்தனை நாட்களுக்குத் தலைவன் பிரிதல் கூடாது?
அ) ஈராறுநாள் ஆ) மூவேழுநாள்
இ) நாளெட்டுநாள் ஈ) ஐயாறுநாள்

59. கல்விப் பிரிவு எத்தனை ஆண்டுகள்?
அ) ஒன்று ஆ) இரண்டு
இ) மூன்று ஈ) நான்கு

60. வாயில்களின் எண்ணிக்கை ______.
அ) ஏழு ஆ) ஒன்பது
இ) பத்து ஈ) பன்னிரெண்டு

அலகு 4: பொருளியல், மெய்ப்பாட்டியல்

61. "மடனொடு நிற்றல் கடன் என மொழிப" – யாருக்கு?
அ) தலைவிக்கு ஆ) தோழிக்கு
இ) நற்றாய்க்கு ஈ) செவிலிக்கு

62. அறத்தொடு நிற்றல் நிலைகள் எத்தனை?
அ) மூன்று ஆ) ஐந்து
இ) ஏழு ஈ) ஒன்பது

63. வரைவு கடாதல் - வரைதல் வேட்கை என்பது
அ) விரைவில் மணமுடிக்க விரும்பல் ஆ) மணவிருப்பத்தை மறைத்தல்
இ) மணவிருப்பத்தைத் தள்ளிப்போடுதல் ஈ) மணம் வேண்டாமெனல்
64. உலக உயிர்கள் அனைத்திற்கும் பொருந்திவரும் விருப்பமுடைமை.
அ) துன்பம் ஆ) அழுகை
இ) அச்சம் ஈ) இன்பம்
65. பொருளியலில் கூறப்படும் பரத்தையர் பிரிவு எவ்வெந்நிலத்தார்க்குரியது?
அ) மருதம், நெய்தல் ஆ) மருதம், முல்லை
இ) மருதம், குறிஞ்சி ஈ) நான்கு நிலத்தார்க்கும்
66. மனைவிக்கு உயர்வும் தலைவனுக்குப் பணிவும் ஏற்படும் காலம் எது?
அ) கூதிர் காலம் ஆ) கார் காலம்
இ) புலவிக் காலம் ஈ) புணர்வுக் காலம்
67. ‘‘______ தானே பொருள் புறத்ததுவே’’
அ) இறைச்சி ஆ) உள்ளுறை
இ) உவமை ஈ) உவமேயம்
68. உள்ளுறை எத்தனை வகைப்படும்?
அ) 2 ஆ) 3
இ) 4 ஈ) 5
69. ‘நிம்பிரி’ என்பது.
அ) சினம் ஆ) பேதைமை
இ) பொறாமை ஈ) வறுமை

70. ‘‘செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும்’’ – யாருக்கு உரியன?
அ) பெண் ஆ) ஆண்
இ) அரசன் ஈ) அமைச்சன்
71. மெய்ப்பாட்டியியலில் ‘பண்ணை’ என்பது
அ) ஆடு, மாடு உள்ள இடம் ஆ) தோப்புகள் நிறைந்த இடம்
இ) விளையாட்டு ஆயம் ஈ) நாட்டிய அரங்கம்
72. ‘‘ … பாலுமா ருண்டே’’ … ‘‘அப்பால் எட்டே’’ என்பனவற்றில் பால் என்பது எதனை உணர்த்துகிறது?
அ) விதி ஆ) ஆண், பெண் பிரிவு
இ) தாய் தருவது ஈ) பகுப்பு
73. ‘பேதைமை’யால் என்ன ஏற்படும்?
அ) நகை ஆ) அழுகை
இ) இளிவரல் ஈ) மருட்கை
74. ‘‘புதுமை பெருமை சிறுமை ஆக்கம்’’ இவற்றால் ஏற்படும் மெய்ப்பாடு யாது?
அ) நகை ஆ) மருட்கை
இ) வெகுளி ஈ) உவகை
75. ‘‘கல்வி தறுகண் இசைமை கொடை’’ ஆகினயவற்றால் ஏற்படும் மெய்ப்பாடு எது?
அ) நகை ஆ) அழுகை
இ) வெகுளி ஈ) பெருமிதம்
76. ‘அச்சம்’ தோன்றக் காரணமானவை.
அ) எள்ளல், இளமை ஆ) புதுமை, பெருமை
இ) செல்வம், புலனே ஈ) அணங்கே, விலங்கே
77. ‘‘இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப்புலம்பல் உண்டியிற் குறைதல் உடம்பு நனி சுருங்கல்’’ போன்றவை எத்திணைக்குரிய மெய்ப்பாடுகள்?
அ) கைக்கிளை ஆ) பெருந்திணை
இ) புறத்திணை ஈ) அன்பின் ஐந்திணை

78. மெய்ப்பாட்டியியலில் தலைமக்கள் இடையே ஒத்திருக்க வேண்டியவையாகக் (பிறப்பே, குடிமை) கூறப்படுவன எத்தனை?
அ) ஏழு ஆ) எட்டு
இ) ஒன்பது ஈ) பத்து

79. மெய்ப்பாட்டின் பொருள்களைச் சிறப்பாக எவ்வுணர்வு உள்ளோர் அறிய இயலும்?
அ) கண்ணும் செவியும் ஆ) மூக்கும் முளியும்
இ) நாக்கும் மூக்கும் ஈ) கண்ணும் தோளும்
80. ‘‘செல்வம் புலனே புணர்வு விளையாட்டு’’ போன்றவற்றால் ஏற்படும் மெய்ப்பாடு எது?
அ) நகை ஆ) அழுகை
இ) பெருமிதம் ஈ) உவகை

அலகு 5: உவமயியல், மரபியல்
81. பொதுவாக உவமை எப்படி இருத்தல் வேண்டும்?
அ) தாழ்ந்ததாக ஆ) உயர்ந்ததாக
இ) புரியாததாக ஈ) மயக்கந் தருவதாக
82. ‘‘கிழக்கிடு பொருள்’’ – என்பது.
அ) தாழ்ந்தது ஆ) உயர்ந்தது
இ) கீழே உள்ளது ஈ) கிழக்கே உள்ளது
83. உவமையின் சிறப்பியல்பு எது?
அ) ஒத்து இருத்தல் ஆ) வேறுபட்டு இருத்தல்
இ) குறிப்பாக உணர்த்தல் ஈ) காட்சிப்படுத்தல்
84. ‘‘அன்ன ஆங்க மான இறப்ப’’ முதலான உருபுகள் எதற்குரியது?
அ) வினை ஆ) பயன்
இ) மெய் ஈ) உரு
85. உவமப்போலி எத்தனை?
அ) 3 ஆ) 5
இ) 7 ஈ) 9
86. தலைவி உவமப் போலியைப் பயன்படுத்தினால் ______.
அ) தான் அறிந்ததைக் கூறுவாள் ஆ) தோழி கூறியதைக் கூறுவாள்
இ) செவிலி கூறியவழி கூறுவாள் ஈ) நற்றாய் கூறியவழி கூறுவாள்
87. ‘‘கிழவோட்கு உவமம் ஈரிடத்து உரித்தே’’ - ஈரிடம் எவை?
அ) மருதம், நெய்தல் ஆ) குறிஞ்சி, முல்லை
இ) இன்பம், துன்பம் ஈ) தோழியிடம் தலைவனிடம்.
88. தலைவன் உவமப் போலியைப் பயன்படுத்தும்போது நில வரையறை _______.
அ) உண்டு ஆ) இல்லை
இ) இருக்கலாம் ஈ) மூன்றும்
89. ‘‘புலிபோலப் பாய்ந்தான்’’ என்பது
அ) வினை உவமம் ஆ) பயன் உவமம்
இ) மெய் உவமம் ஈ) உருபு உவமம்
90. ‘‘எள்ள விழைய புல்ல பொருவ – என்பன.
அ) மெய் உவம உருபுகள் ஆ) பயன் உவம உருபுகள்
இ) வினை உவம உருபுகள் ஈ) உரு உவம உருபுகள்
91. ‘‘மாற்ற அரும் சிறப்பின் மரபு இயல்’’ என்பதில் மரபியல் என்பது _______.
அ) மாறுவது ஆ) மாறாதது
இ) மாற்றுதற்கு அரிதானது ஈ) மாற்றுதற்கு எளிதானது
92. ‘‘பார்ப்பும், பறழும்’’ எதற்குரிய பெயர்கள்?
அ) இளமை ஆ) முதுமை
இ) ஆண் ஈ) பெண்
93. ஆண்பால் பெயராவன ______.
அ) குட்டியும் குருளையும் ஆ) ஏறும் ஏற்றையும்
இ) பேடையும் பெடையும் ஈ) பார்ப்பும் பிள்ளையும்
94. எலி, அணில் இவற்றிற்குரிய இளமைப்பெயர்.

அ) பிள்ளை ஆ) குருளை

இ) மறி ஈ) குட்டி

95. "ஒன்றறி வதுவே" என்பது எந்த உறுப்பால் அறியும் அறிவு?

அ) உடம்பு ஆ) நா

இ) மூக்கு ஈ) செவி

96. ஆறறிவதுவே அவற்றோடு ______.

அ) மூக்கே ஆ) கண்ணே

இ) செவியே ஈ) மனனே

97. "மாவும் மாக்களும்..." எவ்வறிவின?

அ) ஈரறிவின ஆ) மூ அறிவின

இ) நான்கு அறிவின ஈ) ஐ அறிவின

98. மரபியலில் 'பாட்டி' என்றழைக்கப்படுபவை எவை?

அ) பன்றி, நாய் ஆ) அம்மாயி, அப்பாயி

இ) எருமை, மரை ஈ) ஆடு, மாடு

99. "படையும் கொடியும் குடையும் முரசும்" - யாருக்குரியன?

அ) அந்தணர் ஆ) அரசர்

இ) வைசியர் ஈ) வேளாளர்

100. வழக்கு எனப்படுவது யாரால் உருவாகிறது?

அ) வேளாளர் ஆ) வணிகர்

இ) உயர்ந்தோர் ஈ) தாழ்ந்தோர்

# விடைகள்

1. அ) ஏழு
2. ஈ) பாலை
3. ஆ) முதல், கரு, உரி
4. அ) நிலம், பொழுது
5. ஆ) குறிஞ்சி
6. இ) மருதம்
7. ஈ) எற்பாடு
8. ஆ) பிரிதல்
9. ஆ) கருப்பொருள்
10. இ) முல்லை
11. அ) உயர்ந்தோர் மேன
12. அ) மகடூஉ வோடு இல்லை
13. ஈ) தாயரும்
14. ஈ) எத்திணைக்கும் உரியதல்ல
15. அ) தெய்வம்
16. ஆ) கைக்கிளை
17. ஆ) பெருந்திணை
18. இ) பெருந்திணை
19. இ) கலிப்பா, பரிபாட்டு
20. அ) அகத்திணை
21. ஆ) 7
22. அ) ஆ கவர்தல்
23. அ) வெட்சி
24. இ) வெட்சி
25. இ) வெட்சி
26. ஆ) வஞ்சி
27. ஆ) மண் நசை
28. இ) உழிஞை
29. இ) நொச்சி
30. ஈ) தும்பை
31. ஈ) தும்பை
32. அ) அரசர்கள்
33. அ) வாகை
34. இ) வாகை
35. அ) நிலையாமை
36. இ) வஞ்சிக்காஞ்சி
37. ஈ) தொடாக்காஞ்சி
38. அ) பிள்ளைத்தமிழ்
39. ஆ) உலா
40. அ) பெறார்க்கு அறிவுறுத்தல்
41. ஈ) 8
42. அ) ஆடவர்
43. ஈ) காதல் உணர்வு
44. ஆ) 12
45. அ) நாணம்
46. ஈ) செவிலி
47. ஆ) வீட்டின் புறப்பகுதி
48. ஈ) மூன்றும்
49. அ) தலைவன்
50. அ) கண்
51. ஆ) வதுவைச் சடங்கு
52. ஈ) கரணம்
53. அ) 33
54. ஆ) பேறு காலம் முடிந்த காலம்
55. அ) தலைவி
56. ஈ) தலைவி
57. அ) காலம் தாழ்த்தல்
58. அ) ஈராறுநாள்
59. இ) மூன்று
60. ஈ) பன்னிரெண்டு
61. அ) தலைவிக்கு
62. இ) ஏழு
63. அ) விரைவில் மணமுடிக்க விரும்பல்
64. ஈ) இன்பம்
65. ஈ) நான்கு நிலத்தார்க்கும்
66. இ) புலவிக் காலம்
67. அ) இறைச்சி
68. ஈ) 5
69. இ) பொறாமை
70. அ) பெண்
71. இ) விளையாட்டு ஆயம்
72. ஈ) பகுப்பு
73. அ) நகை
74. ஆ) மருட்கை
75. ஈ) பெருமிதம்
76. ஈ) அணங்கே, விலங்கே
77. ஆ) பெருந்திணை
78. ஈ) பத்து
79. அ) கண்ணும் செவியும்
80. ஈ) உவகை
81. ஆ) உயர்ந்ததாக
82. அ) தாழ்ந்தது
83. அ) ஒத்து இருத்தல்
84. அ) வினை
85. ஆ) 5
86. அ) தான் அறிந்ததைக் கூறுவாள்
87. அ) மருதம், நெய்தல்
88. ஆ) இல்லை
89. அ) வினை உவமம்
90. ஆ) பயன் உவம உருபுகள்
91. இ) மாற்றுதற்கு அரிதானது
92. அ) இளமை
93. ஆ) ஏறும் ஏற்றையும்
94. ஈ) குட்டி
95. அ) உடம்பு
96. ஈ) மனனே
97. ஈ) ஐ அறிவின
98. ஆ) அம்மாயி, அப்பாயி
99. ஆ) அரசர்
100. இ) உயர்ந்தோர்